**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

அசல் வழக்கு எண். 66/2010

நாள் 7.03.2023

பெயர். செல்வம் த/பெ. முனுசாமி

வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் 3ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு நிலுவையில் இருக்கும் போது பட்டாவை மாற்ற கூடாது என பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்துவிட்ட பிறகு அரசு தரப்பில் பட்டா மாற்ற முயற்சி செய்தார்களா என்றால் ஆமாம். நான் மேற்படி பட்டா மாறுதல் சம்மந்தமாக அரசு தரப்பில் ஏதேனும் நேரிடையாக முறையீடு செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

2. நான் மனு கொடுத்த பிறகும் உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்துள்ளார்கள். நான் உரிமையியல் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் தீரப்பின்படி அரசு தரப்பில் பட்டா எனக்கு மாற்ற கொடுக்க எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.